
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 10 ஜீலை- 1997 இதழ் - 7



னங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு
வருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்

1. பாவம் வஞ்சனையானது 1
2. நற்செய்திக்குச் செவிகொடுத்தல் 9
3. பெண்கள் பகுதி 15
4. நாம் ஏன் தலைமைத்துவத்தை ஏற்று நடத்த வேண்டும் 18
5. மனிதன் எப்படிப்பட்டவன் 22
6. பிரசங்கத்தில் உதாரணங்கள் 26
7. உன்னுள் என்னைப்பார் 29

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 10 JULY - 1997 Issue -7


## ஆசிரியவுரை

# பாவம் வஞ்சனையானது

"பாவம்" என்ற மூன்றெழுத்து வார்த்தை, இந்தப் பார் முழுவதையும் பாடாய்ப்படுத்திக் கொண்டுள்ளது. இதிலே சிக்கி சீரழியாத மனிதனும், இதன் வஞ்சனைக்குத் தப்பிய மனிதனும் ஒருவனும் இல்லை. **"எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி"** என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. (ரோம. 3 : 23).

'பாவம்' என்ற இவ்வார்த்தைக்குப் பல பொருள் உண்டு. பழைய பிரமாணம் எழுதப்பட்ட மொழியாகிய எபிரேயத்திலும், புதிய பிரமாணத்தின் மொழியாகிய கிரேக்கத்திலும் இதற்கு ஒன்றுக்கும் மேலான அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. 'மீறுதல்', 'அக்கிரமம்', 'குறிதப்பல்', 'வழி தவறுதல்' என்பவை அவைகளில் அடங்கும். பாவத்திற்கு கொடுக்கப்படும் எல்லா விளக்கங்களையும் கவனித்துப் பார்த்தால், ஒரு பொதுவான முடிவுக்கு நாம் வரமுடியும். அதாவது, 'பாவம்' என்பது **"தேவனுக்கு விரோதமாகச் செய்யப்படும் ஒன்று"** என்று. அதிகமான சங்கீதங்களை வடித்துக் கொடுத்த தாவீது அரசனும், அதிக இடங்களில் கிறிஸ்துவின் சபைகள் ஸ்தாபிக்கப்பட காரணமாக இருந்த பவுல் அப்போஸ்தலனும் இக்கருத்தை ஏகமனதாக ஆமோதிக்கின்றனர். (சங்.51:4, ரோம. 8 :7).

ஏவாள், ஆதாம் பாவத்தினாலே, பாவம் உலகத்திலே பிரவேசித்தது என்று நாம் பரிசுத்த எழுத்துக்களிலிருந்து கண்டாலும், இதன் ஆரம்பம்

பற்றி நமக்கு சரியாக அறிவிக்கப்படவில்லை. ஆதாமும், ஏவாளும் பாவத்திலே விழுவதற்கு முன்பாகவே, அவர்களை வஞ்சிக்கக்கூடிய தன்மையுள்ளதாக சர்ப்பம் இருந்துள்ளது. சர்ப்பத்திற்குள்ளாக இந்தப்பாவம் எப்பொழுது புகுந்தது என்று நமக்குச் சொல்லப்படவில்லை. சரி, இதன் ஆரம்பம் பற்றி ஆராய்வதைவிட, இதன் விளைவுகளைப் பற்றித் தெரிந்துகொள்வது மிகவும் நல்லது.

பாவத்திற்கு, மனிதனைப் பாழாக்கும் பயங்கரமான தன்மைகள் பல உண்டு. அவைகளில் கொடுமையானது, அதன் வஞ்சிக்கும் தன்மை. பூமியிலே, மனிதனுக்குள்ளாக புகுந்த, முதல் பாவமே, வஞ்சனையான முறையிலே தான் புகுந்தது. அந்த வஞ்சனையிலே 'ருசி' கண்ட பாவம். இன்றளவும் அதே பாணியைக் கையாண்டு வருகிறது. அப்போஸ்தலன் பவுல் பாவத்தினால் தனக்கு நேர்ந்த கசப்பான அனுபவத்தை எப்படி வெளிப்படுத்தியுள்ளார் என்பதைக் கவனியுங்கள்.

**"பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது"** (ரோம. 7 : 11) என்று. தன்னுடைய பழைய வாழ்க்கை குறித்தும், தன்னுடைய பக்தி வைராக்கியத்தைக் குறித்தும், பிலிப்பியருக்கு பட்டியலிட்டுக் காட்டும் பவுல், தான் " . . . . . நியாயப் பிரமாணத்திற்குரிய, நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன்" என்று பெருமையோடு சொல்கிறான். (பிலி. 3:6). இப்படி, தேவனுக்காக, தேவ நீதிக்காக பக்தியோடும், வைராக்கியத் தோடும் வாழ விரும்பிய பவுலைப் போன்ற திட நம்பிக்கையுள்ள வர்களையே, பாவம், சமயம் பார்த்து வஞ்சித்திருக்கிறதென்றால், அதன் வஞ்சிக்கும் தன்மை எவ்வளவு கொடிதானதாக இருக்கிறதென்று நாம் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். வஞ்சித்தது மாத்திரமல்ல, ஆவிக்குரிய ரீதியில் அவனைக் கொன்றும் போட்டது.

வஞ்சித்தல் என்றால் **"தந்திரமான முறையில் ஏமாற்றுதல்"** ஆகும். தன்னால் முடியாததை, முடியும் என்று சொல்லி மனிதனைப் பாவம் ஏமாற்றுகிறது. தனது உண்மைத் தன்மையை மறைத்து, போலியான ஒரு தோற்றத்தை அவன் விரும்பும் வகையில் அவனுக்குக் காட்டுகிறது. அதுதெரியாத மானிடம் அதிலே மயங்கி விழுந்து தன்னை முற்றிலுமாக அழித்துக் கொள்கிறது.

இப்பொழுது, பாவம் மனிதனை ஏமாற்றும் சில வழிகளைக் கண்டு, அதற்கு இரையாகாமல் நாம் நம்மைக் காத்துக் கொள்வோம்.

## I. பாவம், நாம் சொன்னபடி கேட்பதாகச் சொல்லி ஏமாற்றும்:

எந்த ஒரு பாவமும் முதலில் பார்ப்பதற்கு, **"ஐயோ பாவம்"** என்பது போலத்தான் தோன்றும். அதாவது, நாம் சொல்கிறபடியெல்லாம் அது கேட்பது போலவும், நாம் வேண்டாம், போதும் என்று சொல்லும்போது, நம்மை விட்டுப் போய்விடுவது போலவும் நடந்து கொள்ளும். அப்பொழுது, நாம் செய்யும் எந்த ஒரு பாவமும் நம்முடைய முழுக்கட்டுப்பாட்டில் இருப்பது போலத் தெரியும். ஆனால், அந்தப் பாவத்தில் அல்லது பாவங்களில் நாம் தொடர்ந்து ஈடுபடும்பொழுது, பாவமானது தனது வஞ்சனையின் மூலம் நம்மை, நம்மையுமறியாமல் அடிமைப்படுத்தி, நமக்கு எஜமானாக மாறும்.

ஆம், பாவம் செய்ய ஆரம்பிக்கும்போது, நாம் விரும்பும்போது மாத்திரம் செய்து வந்த பாவங்கள், சிறிது காலமாகும்போது, தன்னுடைய விருப்பத்திற்கு நம்மை ஆட்டுவிக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும்போது, பாவம் செய்து வந்த நாம், ஒரு கட்டத்தில் பாவம் செய்யும் சந்தர்ப்பங்களைத் தேடி அலைய வேண்டி வரும். துவக்கத்தில், ஒன்றைப் பற்றிய நினைவு வரும்போது மாத்திரம், நாம் பாவம் செய்யும் நிலை இருந்திருக்கும். காலப் போக்கில் நம்முடைய நினைவுகளிலெல்லாம் அந்தப் பாவம் நிறைந்து, நம்மை நிலைகுலைய வைக்கும்.

ஒருவேளை, பாவம் எந்த வகையானதாக இருந்தாலும், அவைகளைச் செய்கிற மனிதன் அதற்கு அடிமையாயிருக்கிறான் என்பது யதார்த்தமான உண்மை. இல்லை, இல்லை நான் விரும்பும்போது மாத்திரமே பாவம் செய்கிறேன் என்று ஒருவன் எவ்வளவுதான் அடித்துச் சொன்னாலும், அவன் அதற்கு அடிமை தான். ஏனெனில், பாவம் மற்றும் அதன் தன்மை பற்றியும், அவைகளைச் செய்யத் தீவிரித்துத் திரியும் மனிதன் பற்றியும் மிக நன்றாக அறிந்த இயேசு ஆண்டவரின் கூற்றைப் பாருங்கள். **"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக: பாவம் செய்கிறவன் எவனும், பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்றார். (யோவா. 8:34). மெய்யாகவே, மெய்யாகவே என்று இயேசு சொன்ன வார்த்தைகள் எப்படிப் பொய்யாகமுடியும்?

இதே கருத்தை, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால், அப்போஸ்தலன் பவுல் ரோமாபுரியாருக்கு எழுதும்போது, இன்னும் விளக்கமாகச் சொல்லியுள்ளார். ரோம. 6 : 16–22 பகுதியை வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள். எந்த ஒரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில், பாவத்திற்கோ அல்லது நீதிக்கோ அடிமையாயிருக்கிறான். இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை என்று ஒன்று இல்லை.

அப்போஸ்தலன் பேதுருவும், இக்கூற்றை வலியுறுத்தும் கருத்தைத் தன் நிருபத்தில் சொல்லாமலிருக்கவில்லை. **"தாங்களே கேட்டுக்கு**

**அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே"** (II பேது. 2 : 19). பாவம் செய்கின்ற ஒருவனின் நிலை பற்றி பரிசுத்த வேத எழுத்துக்கள் எவ்வளவு திட்டமும், தெளிவுமாகச் சொல்கிறதென்று பார்த்தீர்களா?

இந்த வசனங்களோடு நம்முடைய வாழ்க்கையை ஒப்பிட்டு, நாம் நம்மைத் தற்பரிசோதனை செய்து பார்த்தால் உண்மை நிலையும் அதுதான் என்பதை சந்தேகத்திற்கிடமில்லாமல் ஒத்துக்கொள்வோம்.

ஆனால், நம்மில் குடிகொண்டு, நம்மை அடிமைப்படுத்தி, ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் பாவங்களை, நாம் ஆரம்ப நாட்களில் செய்யத் தொடங்கினபோது, என்ன மனநிலையோடு துவக்கினோம் என்பதை கொஞ்சம் நினைத்துப் பார்ப்போம். ஒருவேளை அது புகைப்பிடிக்கும் பழக்கமாக இருக்கட்டும், குடிப்பழக்கமாக இருக்கட்டும், விபச்சாரமாக இருக்கட்டும், சூதாட்டமாக இருக்கட்டும் இன்னும் திருட்டு, பொய், புரட்டு, ஏமாற்று, லஞ்சம், பித்தலாட்டம் என்று எதுவாக இருக்கட்டும், இவைகளைச் செய்ய நாம் ஆரம்பிக்கும் போது, என்ன மன நிலையோடு ஆரம்பித்தோம்? சொல்லுங்கள். யோசியுங்கள். எல்லாமே, தீமை என்று தெரிந்தும், வாலிபத்தில் நமக்குக் கிடைத்த சில சேர்க்கைகளுக்காக, நாம் வேலை செய்த இடங்களில் நிலவிய சூழ்நிலைக்காக, குடும்ப பாரத்திற்காக, ஒரு ஜாலிக்காக, மற்றவர்களின் நிர்பந்தங்களுக்காக, அவைகளினால் கிடைக்கும் உடனடி லாபங்களுக்காக, தற்காலிக இன்பங்களுக்காக, இன்னும் விளையாட்டுக் காகவும் கூட அவைகளைச் செய்ய ஆரம்பித்தோம். அப்படித்தானே. கொஞ்ச காலத்திற்கு இருக்கட்டும், பிறகு சூழ்நிலை மாறும்; பிறகு இவைகளையெல்லாம் ஒரு நாளில் ஒழித்துவிடலாம் என்றெல்லாம் மனப்பால் குடித்தோம் தானே.

இப்பொழுது நம்முடைய நிலை என்ன? அதை ஏன் கேட்கிறீர்கள் என்கிறீர்களா? இன்றைக்கு நம்மில் எத்தனைபேர், பாவங்களுக்கு அடிமைப்பட்டு, நம்முடைய வாழ்வை அழித்துக் கொண்டுள்ளோம்? விளையாட்டுக்காக ஆரம்பித்தவை இன்று விசுவ ரூபமெடுத்து ஆடிக் கொண்டிருக்கிறதே எப்படி? அவைகளுக்கு பயந்து நாம் நடுங்கிக் கொண்டிருக்கவில்லையா? விடவும் முடியாமல், வெளியே தெரிந்தால் வெட்கம் என்று எண்ணி பயந்து, பயந்து நாம் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கவில்லையா? குடியால் எத்தனை குடும்பங்கள் நிர்க்கதியாய் வீதியிலே நிற்கிறது! புகையின் கொடுமையால் பல சரீரங்கள் கெட்டுப் போகவில்லையா? சூதாட்டத்தால் சொத்து சுகங்கள் நாசமாகவில்லையா? விபச்சாரத்தால் அநேகச் சரீரங்கள் உருக்குலைந்து ஆட்கொல்லி நோய்க்கு பயந்து கொண்டிருக்கவில்லையா?

சரி, இந்த நிலை எப்படி வந்தது? பாவம். நம்மை வஞ்சித்தது. பாவம் நம்மை ஏமாற்றியது. நாம் விரும்பும் போது நம்மை விட்டு ஓடுகிறேன் என்று சொல்லி, நம்மை நம்பவைத்து, அதனடிப்படையில், நம்மை செயலில் இறக்கி, இப்பொழுது இந்த நிலைக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. பாவத்தின் வஞ்சனை இப்பொழுதாகிலும் புரிகிறதா? உணர்வடையுங்கள்.

## II. பாவம் அழகான தோற்றத்தைக் காட்டி நம்மை ஏமாற்றும்

ஒருவேளை, அழகு இரசனைக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால் நடைமுறையில் நன்மைக்கு ஏற்றதாக இல்லை. அழிவுக்கும், பெருந்தீமைகளுக்கும், வீழ்ச்சிக்கும் அது ஆதாரமாக இருந்தது என்று சரித்திரம் சாட்சி பகர்கிறது. இதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம் உண்டு. அழகை, ஒரு அழிக்கும் ஆயுதமாக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவன் பிசாசு தான். இவ்வாயுதத்தை அவன் வெகு தந்திரமாகக் கையாண்டு, தேவசாயலோடு சிருஷ்டிக்கப்பட்டு, நித்திய காலமாய் வாழும்படியாய் உண்டாக்கப்பட்ட மனிதனை ஆவிக்குரிய ரீதியிலும், சரீரப் பிரகாரமாகவும் மரிக்கும்படியாகச் செய்தான்.

ஆம் **அப்பாவியாக** இருந்த ஏவாள், அழகிலே மயங்கித்தான் **பாவியாகினாள்.** சர்ப்பம் சொன்ன விருட்சத்தைக் கண்டபோது, அவளுடைய பார்வைக்கு அது இன்பமாக இருந்திருக்கிறது என்று வசனம் சொல்கிறது.

**"அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதன் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.** (ஆதி. 3 : 6). வசனத்தின் கடைசிப்பகுதி அவள் **பறித்துப் புசித்தாள்** என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும். அதின் கனியைப் பறித்துப் புசிக்க வேண்டும் என்ற ஆவலை, சர்ப்பம் மாத்திரம் தூண்டவில்லை. **விருட்சத்தின் அழகும் சேர்ந்தே தூண்டியிருக்கிறது.**

ஒருவேளை, அந்த மரம் பார்வைக்கு இன்பமாக இருந்திருக்காவிட்டால், ஏவாள் அதின் பக்கமே போயிருக்கமாட்டாள். கனியைப் பறிக்கவும், புசிக்கவும் நேராமல் போயிருக்கலாம். அப்பொழுது, அதைத் தன் கணவனுக்கும் கொடுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அப்பொழுது, தேவகட்டளை மீறப்படாமல் இருந்திருக்கும். பாவம் உலகில் வந்திருக்காது. ஆணுக்கும்,

பெண்ணுக்கும், இந்தப் பூமிக்கும் கடுமையான சாபம் கிடைத்திருக்காது. மானிடம் இந்தப் பூமியில் அல்லல்படாத ஒரு வாழ்க்கைக்குப் பங்காளிகளாக மாறியிருக்கலாம். மனிதனுக்கான தேவதிட்டம், வித்தியாசமாகப் போயிருக்கலாம். யாருக்குத் தெரியும்?

ஆனால், எல்லாம் எதினால் வந்தது? அழகில் மயங்கினதால் வந்த வினை. இன்றைக்கும், மனிதனுக்கு சரீர உபாதைகளையும், ஆத்துமா உபாதைகளையும் ஏற்படுத்தும் கடுந்தீமைகள் அழகிய தோற்றத்துடன் தான் சமுதாய சந்தையில் வலம் வருகிறது. உதாரணமாக, மது வகைகளை தகர டப்பாக்களில் அடைத்து வைத்து, பிளாஸ்டிக் டம்ளர்களில் ஊற்றிக் கொடுத்தால், மிகக் குறைவானவர்களே அதை விரும்புவர். குடிக்கும் பழக்கத்திற்கு ஆளாவோரும் மிகமிகக் குறைவான எண்ணிக்கையிலேயே இருப்பர். ஆனால் இன்று நிலைமை எப்படி? கண்ணைக் கவரும் மாடல்களிலான பாட்டில்களில் அடைக்கப்பட்டு, பளிச்சென்று வெளியில் தெரிகிறமாதிரியான கண்ணாடி கோப்பை மற்றும் கிண்ணங்களில் பரிமாறப்படுகிறது. அவைகளில் அது ததும்பும்போது, வேண்டாம் என்று நினைப்பவர்கள் உள்ளங்கள் கூடத் தடுமாறுகிறது. சரி, இன்று ஒரு நாள் இருக்கட்டும் என்று பொய்ச் சமாதானம் செய்து கொள்கிறது. ஞானி சாலமோன் இந்த அவல நிலை குறித்து எப்படிச் சொல்கிறார் என்று பாருங்கள். **“மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும்; விரியனைப் போல் தீண்டும், உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும், உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்”.** (நீதி. 23 : 31-33).

மேற்சொல்லப்பட்ட தீமைகளுக்கு அடிப்படை என்னவென்று தெரிகிறதா? பாராதே என்று சொல்கிறான் ஞானி. ஆகவே, அடிப்படை **பார்த்தல்.** பார்க்கும் பொழுது, அதன் தோற்றம், அழகு இவை கவர்ந்திழுக்கிறது.

அடுத்து தாவீதின் வாழ்க்கையில் நடந்ததும் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும். சிறுவயது தொடங்கி, கர்த்தருக்குப் பயந்து நடந்த ஒரு வாழ்க்கையை அவன் நடத்தியிருந்தும், பாவம் இந்த தாவீதை, **‘அழகு’** என்ற படுகுழியிலே குப்புறத் தள்ளியது. தான் ஆடுமேய்க்கும் இளைஞனாக இருந்த பொழுது, கர்ஜித்து வந்த கோலியாத்தைக் குறித்து இவ்விதமாகக் கூறியுள்ளான். **“ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம்”** (Iசாமு. 17 : 26) என்றான். தன்னுடைய தேவனைப் பற்றி இவ்வளவு பெரு மிதம் கொண்டிருந்த தாவீது, அழகிலே மயங்கி பத்துக் கட்டளைகளில் **மூன்று** கட்டளைகளை பகிரங்கமாக மீறினான்.

பத்சேபாளை உப்பரிகையின் மேலிருந்து பார்த்து, அவளது அழகிலே மயங்கினான். அவளை அடைவதற்காக அவன் செய்த சில்ல றைத்தனங்கள் மிகக் கேவலமானது. "பிறர் பொருளை இச்சியாதிருப்பா யாக" "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" "கொலை செய்யாதிருப்பா யாக" என்ற மூன்று தேவ கட்டளைகளை கூசாமல் மீறினான். (IIசாமு.11 அதி).

பாவம் மனிதனை எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது பார்த்தீர்களா? அழகின் பின்னால் போனால் மிஞ்சுவது அசிங்கமே. ஜாக்கிரதையாயிருந்து பாவத்தின் வஞ்சனையில் சிக்காமல் நம்மைக் காத்துக்கொள்வோம்.

**III. பாவம் விதைப்பதை அறுக்கத் தேவையில்லை என்று சொல்லி ஏமாற்றும் :**

மனிதன், இன்று இவ்வளவு தீவிரமாகப் பாவத்தில், கொஞ்சம் கூடப் பயமில்லாமல் ஈடுபடுகிறான் என்றால், அதற்குக் காரணம், அவைகளுக்குத் தண்டனை இல்லையென்ற அவனது ஆழமான நினைப்புதான். தண்டனைக்குப் பயப்படும் பயம் மனிதனுக்கு இயல்பாகவே உண்டு. ஆனால், அந்த இயல்பை மீறி அவன் நடந்து கொள்கிறான் என்றால், அதற்குக் காரணம் அவன், ஏமாற்றப்படுகிறான் என்பதே. அவனுக்கு முன்பாக வீசப்படும் கண்ணியில் அவன் மதியில்லாமல் சிக்கி விடுகிறான்.

அந்த வேலையை பாவம், மிகத் தந்திரமாகச் செய்கிறது. அப்படியே, ஒருவேளை தண்டனை கிடைத்தாலும், அது இப்பொழுது கிடைக்கும் இன்பத்திற்கு ஈடாகாது என்று சொல்லி நூதனமாக தன் காரியத்தைச் சாதிக்கிறது.

ஆனால், செய்த தவறுகளுக்கு தண்டனை உண்டு என்று வேதாகமம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டின் நாட்களில், யோசுவாவின் மரணத்திற்குப் பிறகு, கானானில் எஞ்சியிருக்கிற சில ராஜாக்களோடு போரிட வேண்டிய கட்டாயம் இஸ்ரவேலருக்கு இருந்தது. கர்த்தருடைய அனுமதியோடு அந்த யுத்தங்களை வெற்றிகரமாக அவர்கள் நடத்தினர். ஒருசமயம் அதோனிபேசேக் என்ற ராஜா தோல்வியுற்று இவர்களின் கைக்கு தப்பி ஓடிப்போகையில், அவனைப் பின் தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப் போட்டார் கள். (நியாயா. 1: 6. அந்த நிலையில் அதோனிபேசேக் ராஜா எப்படிப் புலம்பியுள்ளான் என்று கொஞ்சம் கவனியுங்கள் உண்மை விளங்கும்.

**"அப்பொழுது அதோனிபேசேக்; எழுபது இராஜாக்கள், கை கால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின் மேல் விழுந்ததைப்**

**பொறுக்கித்தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார் என்றான்.** (நியா.1 :7).

நீதியுள்ள நம் தேவனிடமிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த உண்மை தெரியாமல் மனிதன் தேவனோடு, விளையாடிக் கொண்டுள்ளான்.

புதிய ஏற்பாட்டிலும் இது இன்னும் தெளிவாகச் சொல்லப் பட்டுள்ளது. விசுவாசத்தில் தள்ளாடிக் கொண்டிருந்த கலாத்தியா பட்டணத்து மக்களுக்கு, பவுல் எச்சரிப்புக் கொடுத்து எழுதும் வசனத்தைப் பாருங்கள். **“மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன், ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.** (கலா. 6 : 7, 8).

இதைவிடத் தெளிவாக, வேதம் வேறு எப்படிச் சொல்ல முடியும்? இவ்வளவு தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பது கூட விளங்காமல் அவன் பாவத்திலே ஈடுபடுகிறான் என்றால், மனிதன் எவ்வளவு கொடுமையாக வஞ்சிக்கப்படுகிறான் என்று பாருங்கள். பாவம் எவ்வளவு நச்சுத்தன்மை உடையதாக உள்ளது எனக் கவனியுங்கள். இந்தப் பாவத்திடம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டியது அவசியம் என சிந்தியுங்கள். பாவம் நம்மை முட்டாளாக்க இனி ஒருபோதும் நாம் அனுமதிக்க வேண்டாம்.

நாம் ஒவ்வொருவரும், பாவம் என்ன சொல்கிறதென்றும், எப்படித் தோற்றமளிக்கிறதென்றும் பாராமல், அதனுடைய உண்மைத் தன்மையையும், அதின் பயங்கரத்தையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் காண்போம். பாவம் என்ன தான் பித்தலாட்டம் செய்து நம்மை வஞ்சிக்கப் பார்த்தாலும், நாம் மயங்கிவிடாமல், பாவத்தை அதன் நிஜத் தன்மையோடு பார்த்து, நம்மைவிட்டு விரட்டுவோம்.

பாவம் எவ்வளவு அசிங்கமானது என நாம் இப்போது பார்த்துள்ளபடியால், அதிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள, மிகச் சிறந்த வழி ஒன்றுள்ளது. அதின்படி நாம் யாவரும் செய்வோம். **“தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்வோம்”** (பிர. 12:13). ஏனெனில், அவருடைய கற்பனைகள் நீதியுள்ளவைகள் (சங். 119 : 72).

ஆகவே நீதியுள்ள அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, பாவமில்லாத ஒரு வாழ்க்கை வாழ, பரலோகத்தின் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் இரக்கம் கட்டளையிடுவாராக!

**EZS. ராஜநாயகம்**

# நற்செய்திக்குச் செவிகொடுத்தல்

ஒருவன் காதால் கேட்கும் காரியமே, அவன் அதை விசுவாசிப்பதை நிர்ணயிக்கக் கூடும். அவன் தவறைக் கேட்கக் கூடியவனாக இருந்தால் – குறிப்பாக, சுவிசேஷத்தை ஆராய்ந்து பார்க்காமலும், சத்தியத்தைக் கற்றுக் கொள்ள எவ்வித முயற்சி செய்யாமலும் இருந்தால் – அவன் தவறையே நம்புகிறவனாக அவன் இருக்கக்கூடும். அவன் சத்தியத்தைக் கேட்கக் கூடியவனாக இருப்பின், அநேகமாக சத்தியத்தை அவன் நம்பக்கூடியவனாகவும் இருப்பது நிச்சயம். எனவேதான், தேவனுடைய தூய வசனத்தைக் கேட்க வேண்டியது மிகவும் அவசியம். பவுல் கூறுகிறார் : "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்". (ரோமர் 10 : 17). ஆனால், எதையாகிலும் கேட்பதைப் பற்றி அல்ல, மாறாக தேவனின் வசனத்தைக் கேட்டு அதின் விளைவாக உண்மையான விசுவாசம் உண்டாவதைப் பற்றி கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை தயவுசெய்து கவனியுங்கள்.

தேவனுடைய வசனத்தின் மேல் ஒருவனுடைய விசுவாசம் கட்டப்பட்டிருப்பதை அவன் எப்படி நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும் என்பது கேள்வி. தேவனுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு பல காரியங்கள் கற்றுத் தரப்படுகின்றன என்றும், வேதாகமத்தின் பக்கங்களிலிருந்து பல காரியங்கள் வருவதாகக் கற்றுத் தருவதும் குறிப்பிடப்படுகின்றன. இவைகளில் பல முரண்பாடானவை. எனவே பிரிவினைகளும் குழப்பங்களும் உண்டாகின்றன. ஆகவே, ஒருவன் சத்தியத்தைத் தான் கேட்டிருக்கிறோம் அல்லது இல்லை என்று எப்படி நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்? அதற்கான மிகச் சிறந்த வழி வேதாகமத்திற்கே செல்லுவதுதான். ஒரு மனிதன் பேரில் எவ்வளவு அன்பும் மரியாதையும் ஒருவன் வைத்திருந்த போதிலும், அவனுடைய போதனைதான் முடிவானது என யாரும் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. நமது ஆத்துமாக்கள் மிக மதிப்புள்ளவை; மனிதர்களின் வெறும் வார்த்தைகளின் மேல் நமது விசுவாசத்தையும் நமது இரட்சிப்பையும் வைத்துக் கூடாத தூரத்தில் நமது நித்திய வாழ்வு உள்ளது. மாறாக, சத்தியத்தின் பிறப்பிடத்திற்கு நாம் செல்லவேண்டும்; அதுவே வேதாகமம். ஒரு முறை நாம் வேதாகமத்திற்குத் திரும்பிவிட்டால், பின் நாம் அதை படித்து, கற்றுக் கொண்டு, நாம் சரியான பாதையில் செல்லுகிறோம் என்பதை சுவிசேஷத்தின் தேடல் மூலமாக நிச்சயப்படுத்திக் கொள்ள

வேண்டும். அவ்வாறு இல்லையெனில், அதை சரி செய்து கொள்ள வேண்டும்.

"வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே," என கிறிஸ்து கூறினார். (யோவான் 5 : 39). பின்னர், பவுல் போதித்ததைக் கேட்ட பெரோயா பட்டணத்து மக்கள் என்ன செய்தார்கள் என்பதைப் பற்றி படிக்கிறோம் : "அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தனர்". (அப். 17:11) இப்போது இதைப்பற்றி சிறிது சிந்தித்துப் பாருங்கள்! பவுல் போதித்ததைக் கேட்ட பின்பும் கூட, அவர் சத்தியத்தைத் தான் போதித்தாரா என்பதை நிச்சயித்துக் கொள்ள தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொண்டிருந்த மக்களை இங்கே காண்கிறோம். பவுலின் காலத்திலே, அவர் போதித்த பின்பு, அவரின் போதனையை சுவிசேஷத்துடன் ஒத்துப் பார்க்கிற மக்கள் இருந்தனர் என்றால், இன்றைய நவீன கால போதகர்களின் போதகங்களைக் கேட்கும் போது, நாம் எவ்வளவு அதிகமாக பரிசோதித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்? ஒவ்வொருவரும் இவ்வாறு செய்தால் அது எவ்வளவு அருமையாக இருக்கும்? அன்றைய நாட்களில் இவ்வாறு இருந்தால், மதத் தவறுகளும் மிகக் குறைவாகவே இருந்திருக்கும், நிச்சயமாக கள்ளப் போதகர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பமாகத்தான் இருந்திருக்கும்.

தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ள தீமோத்தேயு என்னும் ஒரு வாலிபப் போதகனைக் கூட பவுல் உற்சாகப்படுத்தினார். அவர் சொல்லுவதைக் கேளுங்கள் : "நீ வெட்கப்படாத ஊழியக் காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு". (2 தீமோத்தேயு 2 : 15). தேவனுடைய வசனத்தை ஏன் பல மக்கள் அறியாதிருக்கின்றனர்? ஏனெனில் அவர்கள் சுவிசேஷத்தைக் கற்றுக் கொண்டிருக்கவில்லை. மத சம்பந்தப்பட்ட காரியங்களில் பலமக்கள் ஏன் ஏமாற்றப்படுகின்றனர்? மீண்டுமாக, சத்தியத்திற்கும் தவறுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிய அவர்கள் கற்றுக் கொள்ளவில்லை. மோசேயின் நியாயப் பிரமாணத்தையும், கிறிஸ்துவின் சட்டத்தைப் பற்றியும் ஏன் பல மக்கள் குழப்பம் அடைந்துள்ளனர்? அதே பிரச்சனைதான்; அவர்கள் கற்றுக்

கொள்ளாததால், சத்திய வசனத்தை சரியாகப் பகுத்துப் பார்ப்பதில்லை. எனது நண்பர்களே! தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ள அப்போஸ்தலர் பவுல் ஒரு நற்செய்தி போதகனை ஊக்கப்படுத்தினால், அவ்வாறே உங்களுக்கும் எனக்கும் இதே போல செய்ய வேண்டிய தேவை உண்டென்பதை நீங்கள் சிந்திக்கவில்லையா?

யோவான் காலத்திய கிறிஸ்தவர்களை அவர் ஊக்கப்படுத்தினார் : "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்க தரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்." (1 யோவான் 4 : 1). ஏனெனில், பல கள்ளத் தீர்க்கதரிசிகளும், கள்ளப் போதகர்களும் உலகத்திற்குள்ளே புகுந்துவிட்டனர் என்ற எளிய காரணத்தினால், இங்கே எல்லா ஆவிகளையும் எல்லா போதகர்களையும் நம்பாதீர் என தேவனுடைய மக்களிடம் அப்போஸ்தலர் வேண்டுகோள் விடுக்கிறார். ஆனால், ஒருவர் உண்மையான போதகனா அல்லது கள்ளப் போதகனா என்பதை நாம் அறிவது எப்படி? அவர்களை சோதித்துப் பார்க்க வேண்டுமென்று அவர் சொல்லுகிறார். அதை நாம் எப்படிச் செய்வோம்? அவர்களுடைய போதகத்தையும் கற்றுக் கொடுத்தலையும் தேவனுடைய வார்த்தையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதின் மூலம் அதைச் செய்யலாம். இதை மட்டும் நாம் செய்தோமானால், பின்னர் யார் சத்தியத்தைப் போதிக்கிறார், யார் கள்ளப் போதகர் என்பதை நாம் எளிதாகச் சொல்லிவிட முடியும்.

மந்திரியின் இரதத்தோடு பிலிப்பு சேர்ந்து கொள்ளும்போது, சுவிசேஷத்திலிருந்து அவன் படித்துக் கொண்டிருந்ததை பிலிப்பு பார்த்தார் : " . . . இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்" (அப். 8: 35). அதின் விளைவாக உண்மையான விசுவாசம் அவனுடைய இருதயத்தில் உண்டாயிற்று; அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தான். அப்போஸ்தலருடைய நடபடி 8ம் அதிகாரம் 5ம் வசனத்தில், இப்போது பிலிப்பு சமாரியாவுக்குச் செல்லுவதையும், அங்கு கிறிஸ்துவை அம்மக்களுக்கு அவர் போதிப்பதையும் பார்க்கிறோம். பின்னர், பேதுருவும் யோவானும் அங்கு சென்றபோது, கர்த்தரின் வார்த்தையை அவர்கள் போதித்துவிட்டு, எருச லேமுக்குத் திரும்பினார்கள் என்று பதிவேடு கூறுகின்றது. (அப். 8 : 25). அவர்களுடைய போதனையின் முக்கியத்துவம் கிறிஸ்துவின் பேரிலும் தேவனுடைய வார்த்தையின் பேரிலும் இருந்ததை தயவு செய்து கவனியுங்கள்.

இரு வழிகளில் நாம் நற்செய்தியைக் கேட்க முடியும். முதலாவதாக, ஏற்கனவே குறிப்பிட்டபடி, தேவனுடைய வசனத்தை நாம் தாமே கற்றுக் கொள்ளலாம். அப்படிச் செய்யும் போது, பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வசனங்களின் வழியாக கிறிஸ்து, பவுல், பேதுரு, மற்றும் தேவனுடைய பிள்ளைகள் கூறுவதைக் கேட்கும் சந்தர்ப்பம் நமக்கு உள்ளது. ஆனால் இந்த நவீன காலத்திலும் கூட, எல்லா மக்களும் படிக்கத் தெரிந்தவர்களாக இல்லாதபடியால், தேவனுடைய வசனம் வாயினால் போதிக்கப்படுவதை காதால் கேட்பதில் மட்டுமே அவர்கள் சார்ந்திருக்க வேண்டியதாயிருக்கிறது. இக்காரியத்தில் இருவர் சம்பந்தப்படுகின்றனர்: ஒன்று போதகர், மற்றவர் கேட்பவர். இக்காரணத்தினால், தேவனுடைய வார்த்தையை போதிக்கத் தேர்ந்தெடுக்கும் தனிப்பட்ட நபரின் மேல் ஒரு பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறது. புத்தகத்திலுள்ள படியே உண்மையை அவர் போதிக்க வேண்டும். அக்கரையின்றியும், ஏமாற்றியும் தேவனுடைய வசனத்தை கையாண்டு, ஒரு மனிதனை தவறான வழியில் நடத்தினால், அதின் விளைவுகளை அவன் அனுபவிக்க வேண்டி வரும். நல்ல வார்த்தைகளாலும், பேச்சாற்றலாலும் எளிய மக்களின் இருதயங்களைக் களவாடி, ஏமாற்றி பிரிவினை ஏற்படுத்தும் நபர்களை அடையாளங்கண்டு குறித்துக் கொள்ளும்படி பவுல் தமது ரோமைச் சகோதரர்களை எச்சரிக்கிறார். (ரோமர் 16 : 17, 18). பின்னர், கேட்கிறவன் அதை ஏற்றுக் கொள்ளும் முன்பு, தான் சத்தியத்தைத் தான் கேட்கிறான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளும் பொறுப்பு அவனுக்கு உண்டு. தேவனுடைய வார்த்தையை படிக்கக் கூடியவர்கள், சுவிசேஷத்தை தாங்களே ஆராய்ந்து கற்றுக் கொள்ளலாம். ஆனால், படிக்க இயலாதவர்களின் நிலையில் தான் பிரச்சனை மிகக் கடினமாக உள்ளது. அவர்கள் என்ன செய்யக் கூடும்? சத்தியம் மட்டுமே அவர்களுக்குப் போதிக்கப்படுகிறது என்பதில் நிச்சயமாக இருக்க, அவர்கள் எப்போதுமே தங்களுடைய சார்பில் வேறு ஒரு மனிதன் தேவனுடைய வார்த்தையை நேரிடையாக படிக்கக் கேட்டுக் கொள்ள வேண்டும். சத்தியத்தை அறிய உண்மையிலேயே விரும்பும் நபருக்கு நிச்சயமாக அதற்கான ஒரு வழி இருக்கிறது.

உலகமெங்கும் சென்று ஒவ்வொரு சிருஷ்டிக்கும் நற்செய்தியைப் போதிக்க வேண்டுமென அப்போஸ்தலர்களுக்கு நமது கர்த்தர் கட்டளையிட்டார் என்பதால், ஒவ்வொரு மனிதனும் நற்செய்தியைக் கேட்க வேண்டியது மிகவும் அவசியமாகும். (மாற்கு 16 : 15). மீண்டும், பதிவேடு கூறுவது போல, அவர்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளுக்கும்

உபதேசம் செய்யக் கட்டளையிட்டனர். (மத். 28 : 19). ஏன்? மனிதன் நற்செய்தியை, சத்தியத்தை, தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்து, இரட்சிப்பு அடைய, பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார் :

"உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலை கொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்வாய்". (1தீமோ. 4 : 16). கேட்பதால் எப்படி ஒருவன் இரட்சிக்கப்படுவான்? ஏற்கனவே வலியுறுத்தியபடி, விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி விசுவாசத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் இட்டுச் செல்லும்; கீழ்ப்படிதல் இரட்சிப்பைக் கொண்டு வரும். இதே காரியத்தைப் பற்றித்தான் பவுல் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

அப்போஸ்தலருடைய நடபடி புத்தகத்தில் காணப்படும் எல்லா மனந்திரும்புதல்களையும் நீங்கள் படித்துப் பார்த்தால், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒரு நற்செய்தி போதகர் இருந்தார் என்பதை நீங்கள் கவனிக்க முடியும். அவருடைய பணி என்ன? இரட்சிப்படைய தேவையானவர்களுக்கு நற்செய்தியைப் போதிப்பது. எனவே, அவர்கள் நற்செய்தியைக் கேட்டு, அதை விசுவாசித்து கீழ்ப்படிந்தபோது, அவர்கள் இரட்சிப்படைந்தனர். ஆனால் தேவனுடைய வசனத்தைக் கேட்கும் சந்தர்ப்பமே அவர்களுக்குக் கிடைக்காதிருந்தால் என்ன நடந்திருக்கும்? பின், அவர்கள் இரட்சிப்பு அடைந்திருக்க இயலாது; ஏனெனில் விசுவாசம் தேவனுடைய வசனத்தைக் கேட்பதால் மட்டுமே வருகிறது, விசுவாசமின்றி ஒருவன் தேவனை பிரியப்படுத்த இயலாது. (எபி. 11 : 6).

இயேசு மறுரூபமான வேளையில், தமது குமாரனைப் பற்றி தேவன் கூறினார்; " . . . இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள். . " (மத். 17 : 5). மீண்டும், தேவன் எப்படி தமது குமாரனாகிய இயேசுவின் மூலமாக இன்று பேசுகிறார் என நாம் படிக்கிறோம். (எபி. 1 : 1, 2). இறுதியாக, கிறிஸ்து வார்த்தையாக இருக்கிறார் என்று நாம் படிக்கிறோம். (யோவான் 1 : 1, 2). எனவே, நம்மை இரட்சிப்பதற்காக வரும் கிறிஸ்துவுக்கு நாம் செவி சாய்த்து, அவருக்குக் கீழ்ப்படிவது மிகவும் அவசியமாகும். மனிதன் சொல்லியிருப்பதை மறந்துவிடுங்கள். நமது கர்த்தர் சொல்லியிருப்பவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மனிதனுடைய அபிப்பிராயங்கள், எண்ணங்கள், கற்பனைகள் அனைத்தும் ஒன்றுமில்லாத குப்பைகள். கிறிஸ்துவுக்கு மட்டுமே நாம் செவி கொடுக்க வேண்டும். கிறிஸ்துவை மட்டுமே நாம் விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்துவுக்கு மட்டுமே நாம் கீழ்ப்படிய வேண்டும்.

இறுதியாக, " . . . நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக். 1 : 22) என யாக்கோபு எழுதினார். தேவனுடைய பரிசுத்தமான வசனத்தைக் கேட்பது நமக்கு மிகவும் அவசியமாக இருக்கிற அதே வேளையில், இங்கேயே கேட்பதை நிறுத்திவிட்டு நாம் வீழ்ந்தும் போகலாம். சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படியாவிட்டால், அது நம்மை இரட்சிக்காது. எனவே தான், வார்த்தையைக் கேட்கிறவர்களாய் மட்டும் இராமல், செய்கிறவர்களாகவும் நாம் இருக்கவேண்டும் என்று ஊக்குவிக்கப்படுகிறோம். இதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளுவது நல்லது.

எஸ். எஸ். ராஜன் J.C. Choate..

## யெகோவாவால் பழைய ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட திருமண முறை

1. தேவன் "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற கொள்கையே எப்பொழுதும் கொண்டிருந்தார்.
2. இருந்தாலும் பலதார திருமணம் நடைமுறையில் பழைய ஏற்பாட்டின் காலத்தில் இருந்தது.
3. பலதார திருமணத்தால் ஏற்படும் பிரச்னைகளை வேதாகமம் ரொம்ப விளக்கமாக கூறியிருக்கிறது. (1 சாமு 1 : 1, 8)
4. சாலமோனின் பலதார மணம் ஒன்றுபட்ட இஸ்ரவேலை முடிவுக்கு கொண்டு வந்தது.
5. தேவன் நியமித்த திருமண முறையை மீறும்போது அதின் முடிவு அழிவாக இருக்கும்.
6. பலதார திருமணத்தினுடைய சாபத்தால் அன்பு, சமாதானம் குடும்பத்தில் இல்லாமற் போகிறது.
7. பலதார திருமணம் குழந்தைகளை மோசமான காரியங்களுக்கு இழுத்து செல்கிறது. கொலைகார தன்மையுள்ள மனபான்மை அவர்களிடையே நிலவும். உண்மையான அன்பு அங்கே இருக்காது.

## பெண்கள் பகுதி

# சமாரியா ஸ்திரீ

இயேசுகிறிஸ்து தாம் ஊழியம் செய்துவந்த நாட்களில் ஓரிடத்திலே மாத்திரம் தங்கி ஊழியம் செய்யாமல், பல இடங்களிலும் சுற்றித்திரிந்து தன் பணியைச் செய்தார். ஒருசமயம் தன் ஊழியப்பயணத்தில் அவர் யூதேயாவில் இருந்து கலிலேயாவுக்குச் செல்ல வேண்டியதாயிருந்தது. படத்தில் பார்க்கும்போது யூதேயா கீழேயும் கலிலேயா மேல் பகுதியிலும் அமைந்திருக்கும். இந்த இருபகுதிகளுக்கும் இடையே **சமாரியா** என்ற நாடு உள்ளது.

அந்நாட்களில் சமாரியர்கள் மற்றவர்களால், குறிப்பாக யூதர்களால் மிகவும் கீழ்த்தரமாகக் கருதப்பட்டுள்ளார்கள். ஏனென்றால் கலப்பின மக்களாக மாறி, யெகோவா வணக்கத்திலிருந்து திசை மாறிப் போய்விட்டார்கள். முதல் 5 ஆகமங்களில் நம்பிக்கை இருந்தாலும் மோசேயின் பிரமாணம் பற்றியெல்லாம் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. இதுபோக இன்னும் பலகாரணங்களும் சேர்ந்து கொண்டபடியால் யூதர்கள் இவர்களை முழுப்பகையாய்ப் பகைத்தார்கள். எனவே யூதேயாவில் இருந்து கலிலேயாவுக்குச் சென்ற யூதர்கள் சமாரியா வழியே செல்லாமல் சுற்றிச் சென்றுகொண்டிருந்தனர். ஆனால் பாவிகளை நேசிக்கிற இயேசு கிறிஸ்து சமாரியாவை ஒதுக்கிவிடாமல், சமாரியாவின் வழியாகச் செல்கிறார். அதிகாலையிலே தன் பிரயாணத்தை மேற்கொண்ட நமதாண்டவர் இயேசு கிறிஸ்து சுமார் 6மணிநேர நடைபயணத்தால் இளைப்படைந்தவராய் யாக்கோபின் கிணற்றினருகே அமருகிறார். (யோவான் 4:6) அப்போதுதான் நம் தலைப்பின் தலைவி சமாரியா ஸ்திரீ வருகிறாள். இயேசு அவளை நோக்கி : **தாகத்துக்கு தா**" என்றார். இவ்விதமாய் உரையாடல் தொடங்குகிறது.

சரீரத்துக்குரிய கேள்விகளைக்கேட்க ஆரம்பித்த ஆண்டவர் மெல்ல ஆவிக்குரிய காரியங்களுக்குச் சென்று, "உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டு வா" என்றார். தன் கடந்த கால வாழ்வை மறைக்க முயன்ற அவள் நடந்தவைகளையெல்லாம் வெட்ட வெளிச்சமாக்கிய இயேசுகிறிஸ்துவிடம் இனியும் பொய் சொல்லக்கூடாது என்று எண்ணியவளாய் அவரின்

சிறப்புத் தன்மையை முற்றிலும் அங்கீகரித்து "ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி" என்று கூறிவிடுகிறாள். (யோவான் 4 : 19).

இயேசுக் கிறிஸ்துவை தீர்க்கதரிசி என்று ஒத்துக்கொண்ட அவள் சம்பாஷணையை ஆன்மீக ரீதியிலே பிரயோஜனமாக மாற்றி" எங்கள் பிதாக்கள் இந்தமலையிலே தொழுது கொண்டு வந்தார்கள்" என்றாள். இங்கே இவள் குறிப் பிடும்மலை **"கெர்சோம்"** மலை, இந்த மலைக்கு குறைந்தது மூன்று சிறப்பு தன்மைகள் உண்டு. என சமாரியர் எண்ணினார்.

முதலாவது, தேவன் ஆதாமை படைத்தபோது அவர் பயன்படுத்திய மண் கெர்சோம் மலையின் மண் என்று நம்பினர். நோவா காலத்துப் பெருவெள்ளம் இந்த மலையை மூடவில்லை என விசுவாசித்தனர். மூன்றாவதாக யாக்கோபு தேவதூதனோடு போராடினது இந்த கெர்சோம் மலையில்தான். என்பது ஆக மூன்று தனிச்சிறப்புகளைக் கொண்டது இந்த மலை. இந்த மலையில் தொழுது கொள்வதை விட்டு விட்டு எருசலேமிலே தொழுது கொள்ள வேண்டு மென் கிறீர்களே? என வின வினாள்.

இயேசு அவளிடம் "எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது" என்கிறார். அவள் மேலும் பக்தி உணர்வை வளர்த்துக் கொண்டு பேச்சை தொடர்கிறாள். தன்னுடன் பேசுகிறவர் சாதாரணமானவர் அல்ல என்பதை உணரத்துவங்கி விட்டாள். சந்தர்ப்பம் கிடைத்தவுடன் அதை பிரயோஜனப் படுத்திக் கொண்டாள். இயேசுவின் மகத்துவத்தைக் கண்டவுடன் அவள் "தொழுகை"யைப்பற்றி கேட்டாள். நாம் எப்படி?

25ம் வசனத்தில் பார்க்கும் போது "கிறிஸ்து என்னப்பட்ட மேசியா வருகிறார்" என்று அறிவேன் என்கிறாள். வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களாகிய ஆகமங்களை மாத்திரம் தங்கள் நம்பிக்கை புத்தகங்களாக வைத்திருந்த அந்த சமாரியப் பெண் எப்படி "கிறிஸ்து என்னப்பட்ட மேசியா" என்று சொல்கிறாள்? சமுதாயத்தில் சற்று ஒழுக்கக் குறைவாக நடந்த அந்த ஸ்திரீ நல்ல காரியங்களையும் அறிந்தே வைத்திருந்தாள். என்பதை நாம் கவனிப்பது அவசியம்.

கடைசியாக, அவள் செய்த காரியம் **தன்குடத்தைவைத்து விட்டு ஊருக்குள்ளே போனாள்.** அவரை வந்து பாருங்கள் (யோவான் 4 : 28, 29) என்கிறாள். தான் வந்த வேலையை இரண்டாம் பட்சமாக கருதி. முதலாவது இயேசு கிறிஸ்துவை ஊராருக்கு அறிவிக்க வேண்டும் என்ற ஆவலில் ஓடுகிறாள். எது அவசரம், எது அவசியம் என்பதை உணர்ந்து செயல்படுகிறாள்.

இதை வாசிக்கும் அருமைச் சகோதரிகளே! இன்று நம்முடைய நிலை என்ன? தன்னுடன் பேசுகிறவர் கிறிஸ்துதான் என்று அறிந்தவுடன் சரீரபிரகாரமான சம்பாஷணையை மாற்றி ஆவிக்குரிய ரீதியிலே பேசுகிறாளே அந்த ஸ்திரீ. தேவனுடைய மனிதர்கள் வேத வசனங்களை பகுத்துப் போதிக்கும் போது நாம் அவர்களிடம் எதை பேசுகிறோம். எத்தனை பேர் இன்று ஊழியர்களிடம் சென்று தேவையில்லாத சம்பாஷணை நடத்துகிறார்கள்.

அன்றைக்கு அவள் அறிந்திருந்தது கடுகளவு என்றால், இன்றைக்கு நாம் கிறிஸ்துவைப்பற்றி அறிந்திருப்பது கடலளவு ஆகும். தனக்குத் தெரிந்த அறிவைக் கொண்டு கிறிஸ்து என்னப்பட்ட மேசியா வந்து எல்லாவற்றையும் அறிவிப்பார் என்று நம்பிக்கொண்டிருந்தாளே அந்தப் பெண். முழுக்க, முழுக்க வேதத்தைப் படிக்கும் வாய்பபுப் பெற்ற நாம் நியாயத்தீர்ப்பு, மறுமை, அவருடைய வருகை இவைகளைக் குறித்து நாம் என்ன தெரிந்து வைத்திருக்கிறோம்? நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ, அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும். (எபிரேயர் 10 : 25) நம் உறவினர். குடும்பத்தார் ஊரார், அக்கம் பக்கம் உள்ளவர்கள் யாவருக்கும் அவசரமாய், அவசியமாய் கிறிஸ்துவைப் பற்றி கூற வேண்டும்.

42ம் வசனத்தில் பார்ப்போமேயானால், "உன் சொல்லினிமித்தமாக அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்" என்கிறார்கள் சமாரியர்கள்.

சாதாரணப் பெண்ணினிமித்தம் சமாரியர்கள் கிறிஸ்துவை அறிந்துகொண்டதுபோல நம்மூலம் எத்தனைபேரை கிறிஸ்துவின் உபதேசத்திற்கு அழைத்து வந்திருக்கிறோம்? சிந்திப்போம், நிச்சயமாக இந்த சமாரியா ஸ்திரீ நமக்கு ஒருபாடமாக இருப்பாள் என்று நம்புகிறேன். இன்றிலிருந்து நம் வேளைகளை, கஷ்டங்களை, பொறுப்புகளைப் பெரிதாய் எண்ணாமல் அவைகளை இறக்கி வைத்து விட்டு மக்களை கிறிஸ்துவண்டை அழைத்துவரும் முதல்தரமான வேலையைச் செய்வோம்!

**R.R. நாயகம்**

## உங்களுக்குத் தெரியுமா?

*முதல் எருசலேம் தேவாலயம்*

*60 முழ நீளம் 20 முழ அகலம் 30 முழ உயரம்*

*கட்டியது : **சாலமோன்*** *அழித்தது : **நேபுகாத்நேச்சார்.***

# நாம் ஏன் தலைமைத்துவத்தை ஏற்று நடத்த வேண்டும்

ஒரு பிரசங்கியார், பிராந்திய சபையிலுள்ள சில மனிதர்களை சந்தித்து, வரவிருக்கிற தலைமைத்துவ பயிற்சி வகுப்புகளில் பங்கு பெறும்படி ஊக்கப்படுத்தினார். கேள்வி பதில் சமயத்தில், ஒரு மனிதன் கேட்டார் "ஏன் நான் ஒரு தலைமைத்துவத்தை ஏற்று நடத்தும் ஒருவனாக விரும்ப வேண்டும்?

இந்தக் கேள்வி, அநேக பதில்களையுடைய ஒரு நல்ல கேள்வி. இன்றைக்கும் அநேகர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் அல்லது கேட்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு நிச்சயம் தெரியும். இந்த மனிதர்களுக்கு சரியானபடியான பதில் கிடைத்தால் அவர்கள் தலைமைத்துவத்தை ஏற்று நடத்த ஊக்கப்படுத்தப்படுவார்கள். தலைமைத்துவத்தை ஏற்று நடத்தும் பொறுப்புகளின் தேவைகளை அறிவதில், கண்டிப்பாக சில விசேஷித்த காரியங்கள் உண்டு. யாரெல்லாம் இந்த தலைமைத்துவத்தை (leadership)ப் பற்றி கேட்டுக் கொண்டும் எண்ணிக் கொண்டுமிருக்கிறார்களோ, அவர்களுக்கு பதில் சொல்லுவதற்கு முன் இன்னுமொரு சிந்தையை பார்க்க வேண்டும். அது "நான் தலைவனல்ல : "நான் ஒரு பின் செல்லுபவன்" இந்த உள்ளுணர்வு அநேக நல்ல மக்களை ஓரங்கட்டி விட்டது. இவர்கள் இந்த தலைமைத்துவ காரியங்கள் எதிலும் பங்குகொள் வதில்லை. இந்த மனிதர்களை நாம் எப்படி ஊக்கப்படுத்துவது? மீண்டும் ஏன்? ஏன்? என்ற கேள்விகளுக்கு பதில் கிடைத்துவிட்டால். அவர்கள் தலைமைத்துவ பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு அதில் தங்களை இணைத்துக் கொள்வார்கள்.

**சில எதிர்மறை காரணங்களை ஆராய்வோம்.**

தலைமைத்துவத்தை ஏற்று நடத்தும் பொறுப்புகளைப் பற்றிய நேர் மறைக் (Positive Reason) காரணங்களை ஆராய்வதற்கு முன்பு ஏன் ஒரு சிலர் தலைமைத்துவத்தை ஏற்க கூடாது என்ற எதிர்மறைக் காரணங்களை (Negative Reasons) பார்ப்பது நமக்கு ஏற்றதாக இருக்கும்.

ஒருவன் அதிகாரமுள்ள கட்டளைகளை போடவேண்டுமென்று விரும்பினால் அவன் இந்த தலைமைத்துவ பொறுப்பை ஏற்க கூடாது.

இந்த சிந்தை எப்பொழுதுமே தன்னை பின்பற்றி வருபவர்களோடு கருத்து வேற்றுமைகளை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும். தலைமைத்துவம் (leadership) என்பது கட்டளைகளை போடுவதைப் பார்க்கிலும் மேலானது.

ஒருவன் எதேச்சதிகாரி (Dictator)யாக வேண்டுமென்று விரும்பினால் அவன் இந்த பொறுப்பை ஏற்க கூடாது. இது "கிறிஸ்துவைப் போல" என்ற ஒருமைப்பாட்டை சீர்குலைத்துவிடும். இந்த 'தலைமைத்துவம்' கலகக்காரர்களை (rebellion) தூண்டிவிடும்.

ஒருவன், வேறொருவன் இந்த வேலைக்கு இல்லாத காரணத்தினால், இந்த பொறுப்பை ஏற்க கூடாது. நிர்பந்தத்தினால் இந்த பொறுப்பை ஏற்பது தவறு. ஆகவேதான் மூப்பர்களுடைய தகுதிகளைப் பற்றி சொல்லும் போது வேதாகமம், "விருப்பத்தோடு" (I தீமோ 3 : 1) என்று சொல்லுகிறது.

சிலர் சபையின் மூலமான சில வியாபார நோக்குகளின் அடிப்படையில் இந்த பொறுப்பை ஏற்க முயலுவர். இன்னும் சிலர் சபைக்கு ஏற்காத அநேக காரணங்களுக்காக தலைமைத்துவத்தை நாடுவர் இதுவும் தவறு.

சிலர் தன்னுடைய சுய மதிப்பீட்டை விளம்பரப்படுத்த, தக்க தருணம் என்று எண்ணுவதும் தவறு.

சிலர் கொடுத்தலில் ஒரு பெரும் பகுதியை தங்களுடைய பொறுப்பில் வைத்திருப்பதினால் தலைமைத்துவ பொறுப்பை அடைய முற்படுவதும் தவறு. "பணம்", சபை காரியங்களில் பேச நாம் அனுமதிக்கக் கூடாது. பணத்தை பற்றி பேசலாம் ஆனால் பணம் "பேசக் கூடாது' (Money "must not talk" in church affairs).

சிலர் பிடிவாதம் காரணமாக தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்வர். மனைவியின் பிடிவாதம் குடும்ப பிடிவாதமாகும். சபை அங்கத்தினர்களின் பிடிவாதம். ஒருவர் சொன்னார், "அவர்களெல்லாம் என் பின்னால் இருக்க வேண்டுமென்பதற்காக நான் இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். தேவன் எப்போதுமே யாரையும் பிடிவாதப்படுத்தாத போது ஏன்? நாம் அப்படி செய்யவேண்டும்.

## சில நேர்மறைக் காரணங்களை ஆராய்வோம்

நாம் ஏன் தலைமைத்துவத்தை ஏற்று நடத்தவேண்டும்? சில நேர்மறைக் காரணங்களை ஆராய்வோம். (Positive Reasons).

1. தேவனுடைய பணிக்கு நல்ல தலைமையாளர்கள் தேவை. இந்த உலகத்தில் அவருடைய பணியொன்றே மிக முக்கியமான பணியாகும். இது இம்மைக்கும் மறுமைக்குமுரிய ஒரு பணியாகும். சில நூற்றாண்டுகளாக மனிதர்கள் தங்களை பெருமைப்படத்தக்கதான காரியங்களுக்கும் சிறுமைப்படத்தக்கதான காரியங்களுக்கும் ஒப்புக் கொடுத்துள்ளனர்.

ஆனால் நாம் தேவனுடைய பணியைப் பற்றி பார்க்கும்பொழுது, ஒவ்வொருவரும் உயர்ந்தவர்களாகவும் (உயரத்திலல்ல - உயர்வான எண்ணமுடையவர்) நற்பண்புகள் நிறைந்தவர்களாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக "இழந்து போனவர்களுக்கு போதிப்பது," "தேவையிலுள்ளவர்களுக்கு நற்பணியாற்றுவது. (மாற்கு 16 : 15, 16; யாக் 1 : 27) பிதாவின் காரியமானது மிக உன்னதமான ஒன்றாக இருப்பதினால், அர்ப்பணிக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் தேவை. இவர்களைக் கொண்டுதான் இந்த "செய்தி" உலகமுழுதும் கொண்டு செல்லமுடியும். ஒரு கணம் நின்று சற்று யோசித்துப் பாருங்கள், எவ்வளவோ நாம் செய்ய வேண்டிய பணிகளையும், அதின் மதிப்பீட்டையும், அதின் நற்பலன் களையும். ஆகவே தான் நாம் கண்டிப்பாக ஜெபிக்க வேண்டும். "அறுவடையின் ஆண்டவர்" வேலையாட்களை அநேகரை அனுப்பும்படியாக. அதில் நீயும் ஒருவனாக இருக்க விரும்புகிறாயா? தெரிவு செய்வது உன்னுடைய பங்கு.

இந்த உன்னதப் பணி, வாய்ப்புகளினடிப்படையில் விட்டு விடுதல் கூடாது. சிலர் எண்ணுகின்றனர், "தேவனுடைய பணி" எப்படியோ, எந்த வழியிலோ யாரைக் கொண்டோ, தலைமையாளர்களை ஆயத்தம் செய்யாமல் முடிந்துவிடும் என்று ஒரு நோயாளியை குணப்படுத்த மருத்துவர் தேவை. மருத்துவர்களை உருவாக்காமல் நோயாளிகளை எப்படி குணப்படுத்த முடியும். தேவப் பணியை செய்து முடிக்கும் பொறுப்பு சபைக்கு அருளப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்தினால், நீ தலைமையாளனாக மாறு - நீ ஒரு தலைமையாளனாக வேண்டுவது அவசியம், காரணம் காணாமல் போனவர்கள் " (lost) உனக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை ஆபத்தான சூழ்நிலையில் சிக்குண்டு இருப்பவர்களை காப்பாற்றுவதற்கான அடிப்படை பயிற்சிகளை முடித்தால் 1 கோடி ரூபாய் கொடுக்கப்படும் என்ற காரியம் அநேகரை இந்த திட்டத்தில் சேர ஊக்கப்படுத்துமல்லவா? ஒருவேளை பணத்துக்காக இல்லையென்றாலும் ஆபத்திலிருந்து சிலரை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் அநேகருக்கு ஏற்படும். ஒரு நிமிடம் யோசியுங்கள்", ஆவிக்குரிய ஆபத்தில் - பாவத்தால் இழந்து போனவர்களின் நிலைமை

– நம்பிக்கையின்றி அழிந்து போகும். அவலத்தை (யோவான் 8 : 24–28; எபேசி 2 : 1, 2). அவர்கள் உனக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். "அழிவிலிருந்து மீட்படைய" இதற்காகத்தான் நீ உன்னை அர்ப்பணித்து – கிறிஸ்துவின் பணியில் பங்கடைய வேண்டும்.

காலங்களைப் பார்க்கும் பொழுது, இந்த காலக் கட்டத்திலுள்ள பிராந்திய சபைகள் சவால்களையும், பிரச்சனைகளையும் நாள்தோறும் சந்தித்துக் கொண்டேயிருக்கின்றன. பல கோடிக்கணக்கான திட்டங்களினடிப்படையில் நாம் வசிக்கும் அறைவீட்டுக்குள்ளேயே நம்முடைய விசுவாச ஜீவியத்தின் சவால்களை நாம் சந்திக்கிறோம். T.V.யின் மூலமாக நம்முடைய மனதையே அசைக்க கூடிய நுணுக்கமான விஞ்ஞான கண்டுபிடிப்புகள், ராட்சத பணமுதலைகளின் பொருளாதார காசு. வங்கிகளின் கவர்ச்சித் திட்டங்கள் இன்னும் அநேக காரியங்கள் நம்முடைய வாழ்க்கையின் அன்றாட சவால்களாக இருக்கிறது.

நாம் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்குரிய சில பதில்களை நாம் பார்த்தோம். நான் ஏன் தலைமைத்துவத்தை ஏற்று நடத்த வேண்டும்? ஒரு சிலக் காரியங்களை ஆராய்ந்தோம் அவைகள் நாம் தொடர்ந்து இந்தக் கேள்வியின் அடிப்படையில் அநேக கருத்துக்களை கற்றுக் கொள்வதற்கு ஒரு துவக்கமாக அமையட்டும்.

சபையிலுள்ள வாலிபரோ, வயோதிகரோ யாராக இருந்தாலும் தேவனுடைய உன்னத பணிக்காக, தன்னையே ஒப்புக் கொடுத்து வாழும் வாழ்க்கையை பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள இந்தக் கட்டுரையின் மூலம் உங்களை உள்ளன்போடு அழைக்கிறோம்.

வாருங்கள் நாம் தொடருவோம் நம் பயணத்தை மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

**வே. தானியல் துரைராஜ்,** திருச்சி.

## செலூக்கியா அந்தியோகியா

*செலூக்கியாவிற்கு அருகாமையில் சுமார் 16வது மைல் தொலைவில் உள்ளது. இது ஓராண்ட்டஸ் என்னும் நதிக்கரையில் அமைந்துள்ளது. இங்குதான் முதல்முதல் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிறபேர் வழங்கிற்று. அப்போஸ்தலர் 11 : 26.*

## பிசீதியா அந்தியோகியா

*பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியா பாரஸ் என்னும் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. இங்கு ஜெப ஆலயம் இருந்தது. இது பெர்காபட்டணத்தில் இருந்து சுமார் 100 மைல் தொலைவில் அமைந்துள்ளது. அப்போஸ்தலர் 13 : 14*

# மனிதன் எப்படிப்பட்டவன்

**சங்கீதக்காரன் இப்படியாக எழுதியுள்ளான் "சங்கீதம் 8"**

1. எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக் வைத்தீர்.
2. பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர்.
3. உம்முடைய விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது.
4. மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷகுமாரனை விசாரிக்கிற தற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.
5. நீர் அவனை தேவ தூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.
6. உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகைதந்து சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.
7. ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டுமிருகங்களையும்
8. ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினார்.
9. எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது.

இருப்பினும் மனிதன் பாவியானபோது தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை கொடுமையான சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து சாகும்படி செய்து அதன்மூலம் மனிதனை இரட்சிக்க சித்தமுள்ளவரானார் (யோவான் 3 : 16, 17) அவர் ஏன் இதைச் செய்தார்)

மனிதன் ஏன் இவ்வளவு முக்கியமானவனாகக் கருதப்பட்டான் என்பதற்கு, வேதவசனங்கள் என்ன சொல்கிறதென்று பார்ப்போம்.

1. தேவன் மனிதனை பூமியின் மண்ணிலிருந்து உண்டாக்கினார். தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் . . . .'' (ஆதி : 2 : 7) ஆகவே தான் மனிதன் சரீரப் பிரகாரமாக மரிக்கும்போது அவனது சரீரம் மண்ணுக்கு திரும்புகிறதென்று பார்க்கிறோம். (பிர 12 : 7).

2. சரீரப்பிரகாரமாக மனிதன் முழுமையானவனல்ல. ஆகவேதான் அவனுக்குத் துணையாக மனுஷியை உண்டாக்கினார். வசனம் இவ்வாறாகக் கூறுகிறது. பின்பு தேவனாகிய கர்த்தர் : மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல. ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன். (ஆதி 2 : 18). தொடர்ந்து வாசித்தால் "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார் . . . அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதி : 2 : 21–24). இப்பொழுது ஆணும் பெண்ணுமாக சேர்த்து முழுமை பெற்றுவிட்டான். அவர் ஒருமித்து வாழலாம். ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளலாம். பலுகிப் பெருகலாம். பிள்ளைகள் மற்றும் பிள்ளைகளின் பிள்ளைகள் என்று சந்ததிகள் உருவாகித் தொடரலாம். பவுல் அப்போஸ்தலன் இப்படி சொல்லியுள்ளார். "புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல. ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகக் சிருஷ்டிக்கப் பட்டவனல்ல, ஸ்தீரியே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவர். இன்னும் தொடர்ந்து சொல்கையில் "ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை. புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறது போல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான். சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது. (1 கொரி 11 : 11, 12) இதிலிருந்து ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் சார்ந்திருக் கிறார்கள் என்றும், ஆகவே இது இவர்களைப் பூரணப்படுத்துகிற தென்றும் அறியலாம். இதன் விளைவாக வேதாகமம் மனிதனைப்பற்றி பேசும்போது அது பொதுப்படையாகவே பேசுகிறது. அது மனிதனையும் மனுஷியையும், ஆணையும், பெண்ணையும் உள்ளடக்கியதாகவே உள்ளது.

3. தேவனுடைய படைப்பில் மனிதன் கிரீடமானவன். அவனுக்குள்ளாக ஆத்துமாவைக் கொடுத்தார். தேவன் வானத்தையும் பூமியையும் மிருகங்களையும், ஆகாயத்துப் பட்சிகளையும், சமுத்திரத்து மச்சங்களையும் உண்டாக்கி "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக : அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்

பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். (ஆதி 1 : 26, 27).

தயவு செய்து தேவன் இங்கே "நமது" என்று சொல்லியிருப்பதை கவனியுங்கள். இதில் வானத்தையும் பூமியையும் படைத்தபொழுது பிதா, குமாரன் பரிசுத்த ஆவி ஆகியோர் இருந்தனர் என்பதைக் குறிக்கிறது (ஆதி 1 : 1) மீண்டும் "நமது சாயலில் மனிதனை உண்டாக்குவோமாக என்று உள்ளதையும் கவனியுங்கள். அதாவது தேவத்துவம் ஆவியாயிருந்தபடியால் (John 4 : 24) மனிதனுக்கும் ஆவி, ஆத்துமா கொடுக்கப்பட்டது. மனிதனுக்கு உள்ள சரீரத்தை தேவுசாயல் என்று கூறமுடியாது. ஏனெனில் தேவனுக்கு மாம்சபிரகாரமான சரீரம் இல்லை. தேவன் மனிதனை சரீரப்பிரகாரமாக படைத்தார். அவனுடைய நாசியில் ஜீவ சுவாசத்தை ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி 2 : 7). ஆகவேதான் ஞானி சாலமோன் பிரசங்கியில் "மனிதன் மரிக்கும்போது ஆவி அல்லது ஆத்துமா தன்னை தந்த தேவனிடத்திற்கு திரும்புகிறது என்று கூறுகிறார்.

4. மனிதனுடைய ஆத்துமா நித்தியத் தன்மையுடையது. அது உள்ளான மனுஷன் என்றும் (11 கொரி 4 : 16) வானத்துக்குரிய சரீரம் (1கொரி 15 : 47-49) என்றும் சொல்லப்படுகிறது. கிறிஸ்து இவ்விதம் சொல்கிறார்" ஆத்துமாவைக் கொல்லவல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். (மத். 10 : 28) தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுதல் என்றளவில் ஒரு ஆத்துமா மரிக்கமுடியும். ஆனால் ஆத்துமா இல்லாமல் போய்விட்டது என்றளவில் அது மரிப்பதில்லை. ஆகவே தான் ஒரு ஆத்துமா உலகம் முழுமையைக் காட்டிலும் விலையேறப் பட்டது. (மத் 16 : 26). மனிதன் தேவசத்தத்துக்கு செவிகொடுக்க விரும்பும்போது, பின்பற்றி அவருடைய போதனைக்குக் கீழ்படியும்போது அவன் தன் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனுக்குண்டான நம்பிக்கையை பெற்றுக் கொள்ளலாம் (மத். 17 : 5, லூக் 9 : 23, மாற் : 16 : 16, யோ : 14 : 1-3).

5. மனிதன் தேவனை ஆராதித்து, அவருக்கு பணிவிடை செய்து மரணபரியந்தம் அவருக்கு உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும். (யோ 4 : 24, மத் : 6 : 24, வெளி : 2 : 16) எல்லாவற்றையும் அவருடைய

நாமத்தின்படி செய்யும்போது அவருடைய சாயலில் அங்கமாகும் போது அவருக்கு காரியத்தையும், மகிமையையும் கொண்டு வருகிறான். (கொலோ: 3 : 11).

6. சிந்திக்கவும், கற்றுக் கொள்ளலாம், கேள்வி கேட்கவும், முடிவெடுக்கவும், தெரிந்தெடுக்கவும், விசுவாசிக்கவும், கீழ்படியவும், ஆராதிக்கவும், உண்மையாயிருக்கவும், போதுமான திறன் உண்டு. மேலும் அவனால் வெறுக்கவும், மறுதலிக்கவும், ஒதுக்கவும், கீழ்ப்படியாமலிருக்கவும், தேவ அன்பையும், இரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ள மறுக்கவும் முடியும். தேவனுடைய இரக்கத்தையும், கிருபையையும் அங்கீகரிப்பவர்களை அவர் இரட்சித்து, ஆசீர்வதித்து தனக்காக வைத்துக் கொள்கிறார். (எபே : 2 : 8,9).

7. மனிதன் தேவனுக்குக் கணக்கொப்புவித்து தன்னுடைய நித்திய வாழ்க்கையை பரலோகத்திலோ நரகத்திலோ கழிக்கவேண்டும். யாரிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவர்களிடத்தில் அதிகம் எதிர்பார்க்கப்படும் பவுல் உரோமருக்கு எழுதும்போது இவ்விதம் குறிப்பிடுகிறார். "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோ : 14 : 12) கர்த்தர் தமது வார்த்தையைக் கொண்டு நம்மை நியாயந் தீர்ப்பார் (அப். 17 : 31). யோவா 12 : 47.48) நாம் ஒவ்வொருவரும் நம்முடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படுவோம். (II கொரி 5 : 10). நீதிமான்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும் துன்மார்க்கரோ நித்திய நரகத்திலே தள்ளப்படுவார்கள்.

மனிதன் எப்படிப்பட்டவன்? அவன் இருதன்மையுடையவன். அவன் சரீரப் பிரகாரமானவனாகவும், ஆவிக்குரியவனாகவும் உள்ளான். அவன் மாம்சமும், ஆவியுமானவன். அவன் அழியும் தன்மையுடையவனாகவும், அழியாத்தன்மையுடையவனாகவும் உள்ளான். அவன் மரிப்பான். இருப்பினும் வாழ்வான். அம்மனிதன் நானும் நீங்களும் தான். அவன் பூமியில் வாழ்கிறான். ஆனால் ஆன்மாவில் நித்தியத்தை கழிக்க பரலோகத்திற்கோ, நரகத்திற்கோ செல்வான். அவன் எவ்வளவு மகத்தானவன். அவன் எவ்வளவு கணத்திற்குரியவன் ஆனால் அவன் தேவை எவ்வளவு பெரிதென்று பாருங்கள். அவனுக்கு தேவனும் இரட்சிப்பும் தேவை. தேவன் நம்மை இரட்சித்து, எப்பொழுதும் தன்னுடன் வாழ பரத்திற்கு எடுத்து செல்ல விரும்புகிறார். நாம் அவர் நிமித்தமும் அவரை ஏமாற்ற வேண்டாம். நமது நிமித்தமும் அவரை ஏமாற்ற வேண்டாம்.

**J.C. சோட்.**

# 7. பிரசங்கத்தில் 'உதாரணங்கள்'

பிரசங்கியின் பிரசங்க வார்த்தைகளை மக்கள் மறந்துவிடாமல் மனதிலே என்றும் நிலைத்திருக்க பிரசங்கத்தில் உதாரணங்களைச் சேர்க்க வேண்டும். தான் சொல்லுகின்ற சத்தியம் தெளிவாயும், மனோகரமாயும், பலமாயும் இருக்க உதாரணங்கள் தேவைப்படுகின்றன. நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து தனது சத்தியத்தைப் பிரசங்கிக்கும்போது உதாரணங்களை சேர்த்துக் கொண்டார். இதன் பயனாக கேட்போர் அனைவரும் சத்தியத்தை சுலபமாக புரிந்து கொண்டனர். மேலும் தாவீது உரியாவின் மனைவியிடத்தில் பிரவேசித்து பாவத்திற்குள்ளானபோது நாத்தான்வேல் தீர்க்கதரிசி உதாரணத்தைக் கொண்டு தாவீதுவின் பாவத்தை உணர்த்தினார். தாவீது பாவத்தை உணர்ந்து மனந்திரும்பினான். (2. சாமு 12 : 1-13). அப்படியே அப்போஸ்தலரும் நியாயப்பிரமாணத்தினால் ஒரு பலனும் இல்லை என்பதை உதாரணங்களின் மூலமே போதித்தார்கள். (ரோமர் 7: அதிகாரம்) நாமும் நமது பிரசங்கத்தில் உதாரணங்களை இணைத்துக் கொள்வோம்.

உதாரணங்கள் எப்பொழுதும் உதாரணங்களாகவே இருக்கட்டும். பிரசங்க பகுதியை மிகுதியாக பிடித்திருக்கக் கூடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். உதாரணங்கள் எவ்வளவு சொன்னாலும் மக்கள் ஆவலாய் கேட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் ஒரு பிரசங்கி முப்பது நிமிடமும் உதாரணங்களையே சொல்லி காலத்தை வீணாக்காமல் இருக்க வேண்டும். கதைகளைச் சொல்லி காலத்தை வீணாக்குகிற பிரசங்கி கதையடிக்கிற பிரசங்கியாகத்தான் இருக்க முடியுமே தவிர கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற் பிரசங்கியாக இருக்க முடியாது. ஆகவே உதாரணங்கள் எப்பொழுதும் உதாரணங்களாகவே பயன்படுத்துவோம். நமது பிரசங்கத்தின் முக்கிய நோக்கம் மக்களை ரட்சிப்பிற்குள் வழி நடத்தப்பட வேண்டும். இதை மறக்கக் கூடாது. உதாரணங்கள் கேட்போரின் கவனத்தை கவர்ந்துகொள்ளவே. இது காரியத்திற்கு இசைவாய் கண்கண்டாற்போல் சொல்ல வேண்டும். இப்படி உவமானங்களைக் கூறுவதின் மூலமாக ஜனங்களின் வெறுப்பு நீங்கும்.

பிரசங்கியின் பிரசங்கம் இயல்பாகவே அசைவு ஏற்படுவதற்கு உதாரணங்கள் பெரிதும் துணை செய்கிறது. பிரசங்கத்தின் இடையிடையே இசைவு கண்டு அநேகர் சத்தியத்தின்பேரில் விருப்பமுள்ளவர்களாவார்கள். பிரசங்கி உணர்வும், உருக்கமுமான உண்மை ஒப்பனைகளைச்

சொல்லி ஜனங்களின் வெறுப்பை நீங்கச் செய்து அவர்கள் திரும்ப வெறுப்படையுமுன் நாம் அவர்களுடைய இருதயத்தில் சத்தியத்தை புகட்ட வேண்டும். உதாரணங்கள் இரண்டு நிமிடத்திற்கு மேல் ஐந்து நிமிடத்திற்குள் நீண்டுவிடாமல் இருந்தால் இப்படிச் செய்ய முடியும்.

உதாரணங்களினால் மனதில் அழுத்தப்பட்ட சத்தியம் எளிதில் மறந்து போகாது, முறையாய்க் கோர்க்கப்பட்ட ஒரு வாக்கு வாதத்தை ஞாபகத்தில் வைத்திருப்பது கடினம், ஒரு ஒப்பனையின் மூலமாய் மனதில் பதிக்கப்பட்ட விசயத்தை நினைப்பதோ மிகவும் எளிது. ஆகவே நமது பிரசங்கங்களை மக்கள் மறந்துபோகாமல் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டுமெனில், நாம் தகுதியான உதாரணங்களைக் கொண்டு பிரசங்கிக்க வேண்டும். அவர்களுடைய சிந்தனையைத் தூண்டவும், மனதுக்கு இன்பம்தரவும் இப்படிப்பட்ட உதாரணங்கள் உதவியாக இருக்கிறது. நாம் சொல்லும் திருஷ்டாந்தமானது தெப்பம் போல் நமது உபதேசத்தை மிதத்திக் கொண்டு போய் இருதயத்தில் சேர்த்து, ஆணிபோல் அதை மனதில் தைத்து அம்புபோல் நெஞ்சில் பாய்ச்சி அதை அங்கே தைத்துக் கொள்ளும்படி செய்கிறது.

உதாரணமானது நாம் போதிக்க வேண்டிய சத்தியத்தை தெளிவாய் காட்ட உதவுகிறது. ஒரு ஜன்னலைத் திறக்கும்போது அதன் வழியாய் வெளிச்சம் வந்து அறை முழுவதையும் பிரகாசமாக்கி அதிலுள்ள பொருட்களைக் கண்ணுக்குப் புலப்படச் செய்கிறது போல உதாரணமும் நாம் வற்புறுத்தும் சத்தியத்தை மனதிற்கு லேசாய் விளங்கப் பண்ணுகிறது. சத்தியத்தைக் கேட்போரும் இந்த உதாரணம் என்னத்திற்குச் சொல்லப்படுகிறதென்று கண்டுபிடிக்கும்படி நமது வார்த்தைகளுக்கு செவி கொடுத்து விழித்த கண்ணும் திறந்த காதுமாய் கேட்டுக் கொண்டு இருப்பார்கள்.

ஜனங்களுக்கு பிரசங்கிக்கும்பொழுது அதற்கேற்ற நல்ல உதாரணங்களை சொல்ல வேண்டுமெனில் பிரசங்கி அதற்கேற்ற உதாரணங்களை சம்பாதித்துக் கொண்டிருக்கவேண்டும். உதாரணங்களை சம்பாதிப்பது என்பது கஷ்டமான காரியம் இல்லை. நாம் அன்றாடம் வாசிக்கும் செய்தித்தாள்கள் நம்மிடம் கொஞ்சி விளையாடும் மழலைச் செல்வங்களின் சொற்களிலும், பிள்ளைகளின் விளையாட்டுகளிலும், தெரு வீதியிலும், கடைவீதியிலும், உட்கார்ந்திருக்கும் இடத்திலும், நாம் நடந்து போகும் பாதையிலும், வயல்வெளிகளிலும், கல்வி நூல்களிலும், தேச சரித்திரத்திலும், தொழில் துறைகளிலும். இப்படி எப்பக்கத்திலும் நாம் உவமானங்களைக் காணலாம். இவைகளிலிருந்து புதுப்புது

உதாரணங்களை நாம் சம்பாதித்துக் கொள்ளலாம். நாம் சிறு பிராயத்தில் கேட்ட உண்மைக் கதைகள். வாலிபத்தில் கண்ட காட்சிகளிலும் நமக்கு அறிமுகமான நண்பர்களும் நமக்கு உவமானங்களாகக் கிடைக்கும். சகல இடங்களிலும் நமக்குத் தகுந்த உதாரணங்கள் தென்படும். அவைகளை சம்பாதித்துக் கொள்வோமாக.

நமது ஆண்டவர் இயேசு உலகப் பொருட்களிலும், சம்பவங்களிலுமிருந்து ஆவிக்குரிய சத்தியங்களை விளக்கிக் காண்பித்தார். அவைகளில் சில

1. கோழி தன் குஞ்சுகளை தன் சிறகுகளின் கீழ் கூட்டிச் சேர்த்துக் கொள்ளுதல்.
2. சிறிய விதையிலிருந்து முளைத்து வரும் கடுகு,
3. மாப்பிசைதல்
4. காணாமற்போன ஆடு,
5. காணாமற்போன வெள்ளிக்காசு
6. காணாமற்போன குமாரன்
7. விதைக்கிறவனின் உவமை
8. திராட்சத் தோட்டக்காரர்
9. தாலந்துகளைக் குறித்த உவமை
10. ராஜா தன் குமாரனுக்கு கலியாணம் செய்து விருந்துக்கு அழைக்கும் உவமை.

இப்படி பல உதாரணங்களைப் பார்க்கமுடியும். சாதாரண ஜனங்கள் நமது ரட்சகரின் போதனைகளுக்கு ஆவலாய் செவிகொடுத்ததின் முக்கிய காரணம் இப்படிப்பட்ட உதாரணங்களே! நாமும் அநேக ஜனங்களை சத்தியத்திற்குள் வழி நடத்தப்பட ஆண்டவரை மாதிரியாக நோக்குவோமாக.

நமது பிரசங்கத்தில் உதாரணங்களை இணைத்துக் கொள்ளும் காரியத்தில் ஒரு சில எச்சரிப்புகளை அறிய வேண்டும். அதாவது ஜனங்களுக்கு ஏற்கனவே தெளிவாய் இருக்கிற விசயத்திற்கு உதாரணங்கள் அவசியமில்லை. தெளிவாய் தெரிந்த விசயத்திற்கு உதாரணம் கூறி நேரத்தை வீணாக்காமல் உதாரணத்தைக் கூறிவிட்டு சத்தியத்தில் வழி நடத்த பிரயாசப்படுவோம். நமக்கு கொடுக்கப்பட்ட நேரத்தில் பல உதாரணங்களை ஒரே காரியத்திற்காகச் சொல்லி நேரத்தை வீணாக்காமல் இருப்போம். மேலும், உதாரணங்கள் எப்பொழுதுமே மேலான உதாரணங்களை கூறுவோம். மலிவான உதாரணங்கள் பிரசங்கத்தின் அழகை கெடுத்துவிடும்.

**K. பாஸ்கர்,** அருவங்காடு.

# உன்னுள் என்னைப் பார்

இந்த தலைப்பினை படிக்கும் போது வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்கின்ற மக்கள் தனக்குரிய பாணியிலே எடுத்துக் கொள்வார்கள். ஆனால், பரிசுத்த வார்த்தையை தியானிக்கின்ற நம்மை பார்த்து நமதாண்டவர் நான் உன்னுள் இருக்கிறேனா என்பதை சரிபார் என்று கேட்கிறார். அநேக கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் நமதாண்டவர் வருவதும், போவதுமாக இருக்கிறார். சிலர் வாழ்க்கையில் கிறிஸ்து இருப்பதில்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரின் வாழ்க்கையில் தான் கிறிஸ்து நிரந்தரமாக தங்கி வாழ்கிறார். அவர்கள் மாத்திரமே பூமிக்குரிய, ஆவிக்குரிய, சகல ஆசீர்வாதங்களையும் பெற்று சுகமாக வாழ்கின்றார்கள். நமக்குள் ஒரு சந்தேகம், கிறிஸ்து எனக்குள் எப்படி தங்கி வாழ்வார்? இதற்கு அநேக வழிகள் உண்டு. இவைகளிலேயே பிரதானமான ஒரு வழி கர்த்தரின் பந்தியினை வேதம் சொல்வது போல் அனுசரிப்பது. கிறிஸ்தவன் வாழ்க்கையில் கர்த்தரின் பந்தி பிரிக்க முடியாத ஒன்றாக அமைய வேண்டும். நமதாண்டவர் மூலம் பெற்ற நித்திய ஜீவன் இதன் மூலமாக பாதுகாக்கப்படுகிறது. நமதாண்டவர் அநேக அற்புதங்களை செய்தார். அதனாலே அவரை நெருங்க முடியாத அளவிற்கு மக்கள் கூட்டம் பின் சென்றது. யோவான் ஆறாம் அதிகாரத்தை வாசிக்கும் போது ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன் துண்டையும் ஐயாயிரம் பேர் சாப்பிடும்படி செய்தார். அதனாலே அவர் எங்கு சென்றாலும் அவரை தேடி பின்தொடர்ந்த மக்களை பார்த்து (யோவான் : 6 : 26,27) அழிவில்லாத ஓர் உன்னத போஜனத்தை குறித்து பேச தொடங்கினார். நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். யோவான் : 6 : 51 அப்போது யூதர்கள் : இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி புசிக்க கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் செய்தார்கள் : யோவான் : 6 : 52 அவருடைய சீஷரில் அநேகர் இவைகளை கேட்ட பொழுது, இது கடினமான உபதேசம் : யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள். யோவான் : 6 : 60 அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கி போனார்கள். யோவான் : 6 : 67. அப்போது இயேசு பன்னிருவரையும் நோக்கி : நீங்களும் போய்விட மனதாயிருக் கின்றீர்களோ யோவான் : 6 : 68 என்று சொல்லகூடிய சோகமான

சூழ்நிலை உருவானது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நமக்கு இது கடினமான உபதேசமல்ல : என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். மத் : 11 : 30 அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல 1 யோவான் : 5 : 3 அப்படியென்றால் எப்படிதான் கத்தரின் பந்தியை கைக்கொள்வது. அதற்கு வேதம் நம் மத்தியிலே வெளிச்சம்போட்டு காட்டுகின்றது. கர்த்தரின் பந்தியிலே கையிடுவதற்கு முன்பாக நாம் கடைபிடிக்க வேண்டிய மூன்று படிகள் :

1) நினைவு கூருதல்
2) தன்னை தானே சோதித்தறிதல்
3) இரண்டாம் வருகையை முன் அறிவித்தல்
4) ஐக்கியம்

## 1) நினைவு கூருதல் (1 கொரி : 11 : 24, 25)

கர்த்தர் நமக்காக கொல்கதா மலையிலே பாடுபட்டு தன் ஜீவனை தியாகமாக கொடுத்தாரே அதை நினைக்கும் படியாக வலியுறுத்துகிறார். இரண்டு வகையாக பிரித்து நினைவு கூறும்படிக்கு நமக்கு கட்டளை கொடுத்துள்ளார்.

### அ) அப்பம் புசிக்கும்போது 1 கொரி. 11 : 24

நாம் அப்பத்திலே கைக்கொள்வதற்கு முன் கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூறவேண்டும். நான் பிதாவின் முன்பாக நிற்பதற்கு தகுதியற்றவனாக இருந்தேன். ஆனால் அவருடைய சரீரம் கிழிக்கப் பட்டதினாலே, என்னை தகுதியாக்கி அவருடைய சமூகத்தில் சேரும் படிக்கு செய்தார் எபே : 2 : 14-16 என்பதையும் நினைவு கூறவேண்டும். அவர் சரீரத்திலே பட்ட உபாதைகளையும் நினைவுகூற வேண்டும்.

### ஆ) பானம் பண்ணும்போது 1 கொரி : 11 : 25

அவருடைய இரத்தத்தை பானம் பண்ணும்போது, சிவப்பாய் இருந்த எனது பாவத்தை உறைந்த பனியைபோல் மாற்றினாரே என்பதை நினைவு கூறவேண்டும். தூரமாக இருந்த நாம் அவருடைய இரத்தத்தினாலே பிதாவினிடம் கிட்டி சேர்ந்தோம் எபே : 2 : 13, அவருடைய இரத்தத்தினாலே கிரையமாக கொள்ளப்பட்டோம் 1 கொரி : 6 : 20, கர்த்தரின் இரத்தம் நமக்கும் பிதாவாகிய தேவனுக்கும் புதிய உடன்படிக்கையாக இருப்பதாக வேதம் கூறுகிறது. ஆகவே இந்த பரிசுத்தமுள்ள இரத்தத்தை பானம் பண்ணும்போது என்னுடைய சகல பாவத்தையும் மன்னித்தது என்பதை உணர்ந்து நினைவு கூற வேண்டும், மரணத்திலே நமக்காகப் பட்ட கஷ்டங்களையும் நினைவு கூற வேண்டும்.

**2. தன்னை தானே சோதித்தறிதல் 1 கொரி : 11 : 28**

இந்த படியிலே நான் யார் என்பதை உணர்ந்து பார்க்கச் சொல்கிறார். தாழ்விலே, யாருக்கும் உதவாமல், உலகம் வெறுக்கக்கூடிய பாவத்தினை மனபூர்வமாக செய்து வந்தேன் என்பதை நினைத்து பார்க்க கட்டளையிடுகிறார். இப்படி வாழ்ந்த என்னை தேவன் அன்பாய் நேசித்து தன்னுடைய மார்போடு அணைத்து கொண்டாரே அதை உணர்ந்து பார்க்கச் சொல்கிறார். எப்படியெனில் சகோதரரே நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள் : 1 கொரி : 1 : 26.

**3. இரண்டாம் வருகை முன் அறிவித்தல் 1 கொரி : 11 : 27**

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கம் இருப்பதுபோல், கர்த்தரின் பந்தியை நாம் கைக்கொள்ளும் போது நித்திய ஜீவனை பாதுகாக்கிறோம் என்பதாக ஒரு அர்த்தம் இருந்தாலும், அதன் மற்றொரு பக்கம் நாம் ஒவ்வொரு முறையும் கைக்கொள்ளும்போது நமதாண்டவரின் இரண்டாம் வருகை முன் கூட்டியே அறிவித்துக் கொண்டு இருக்கிறோம் என்பதாக மற்றொரு அர்த்தமுள்ளதாக வேதம் புலப்படுத்துகிறது.

**4) ஐக்கியம் 1 கொரி : 10 : 16**

கர்த்தருடைய பந்தியினை உணர்ந்து கைக்கொள்ளும் போது கர்த்தருடைய சரீரத்திலும், ரத்தத்திலும் நாம் ஐக்கியமாக இணைக்கப் படுகிறோம். 1 கொரி : 10 : 16 சபையாக கூடி அனுசரிக்கும் போது அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம். I கொரி : 10 : 17 என்று இரண்டு ஐக்கியம் பற்றி கூறுகிறது. மேலும் ஐக்கியத்தின் முக்கியத்துவத்திற்கு ஒரு வசனம் : 1 கொரி : 10 : 18.

2) என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனை கடைசி நாளில் எழுப்புவேன். யோவான் : 6 : 56.

3) என் மாம்சத்தை புசித்து, என் இரத்தத்தை பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான் நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். யோவான் : 6 : 54.

4) பாத்திரமாக கைக்கொள்ளும்போது நமக்கு ஆக்கினை தீர்ப்பு வராதபடி காத்து கொள்கிறோம். 1 கொரி : 11 : 29.

5) வேதம் சொல்கிற பிரகாரமாய் கர்த்தரின் பந்தியினை அனுசரிக்கும்போது பரிசுத்தமுள்ள சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்து குற்றமற்றவனாக காணப்படுவோம் : 1 கொரி : 11 : 27.

6) பந்தியினை உணர்ந்து கைக்கொள்ளும்போது நாம் ஆவிக்குரிய விஷயத்தில் பெலவீனமாகவும், வியாதியுள்ளவராகவும் விசேஷமாக நித்திரை அடையமாட்டோம். 1 கொரி : 11 : 30.

மேலே சொன்ன வேத காரியங்கள் படி செய்யாமல் இருக்கின்ற மக்களுக்கு ஒரு வசனத்தை மட்டும் கோடிட்டு காட்டலாம். 1 கொரி:11:30 இந்த வசனத்தின் படி முதலில் பெலவீனம் அடைவார்கள். இரண்டாவதாக வியாதியடைவார்கள். மூன்றாவதாக ஆவியிலே மரித்து போவார்கள். ஆவியிலே மரித்தால் நமக்கும் தேவனுக்கும் தொடர்பு துண்டிக்கப்படுகிறது. தேவனிடத்தில் உமக்கு பங்கு இல்லை. ஆதியாகமம் : 3 : 2, 3-படி புசிக்கும் நாளிலே சாகவே சாவீர் என்றார். அவர்கள் புசித்து ஆவியிலே மரித்ததினாலே தேவன் அவர்களிடம் பிரியப்படவில்லை. அவர்களுக்குள் இருந்த உறவு முறிக்கப்பட்டது. தேவனிடத்தில் உறவு இல்லையெனில், பரலோகத்தில் நமக்கு பங்கு இருக்குமா? என்பதை யோசித்து பார்ப்பது அவசியம், ஆவியிலே செத்த மனுஷன் பரலோகத்திற்கு செல்ல முடியாது என்பதாக வேதம் வாசிக்கும் போது நமக்கு திட்டமாக புலப்படுகிறது. அதே நிலைதான் நமக்கும். ஆகவே கர்த்தரின் பந்தியினை அசட்டையாக நினைக்காமல், என்றென்றைக்கும் பிழைக்கும்படி ஜாக்கிரதை உள்ளவர்களாய் தகுதியுள்ளவர்களாய் பங்கு கொள்வோம்.

*தியாப்லஸ்* **E. சங்கர்.**
*அரக்கோணம் 1.*

## புதிய ஏற்பாட்டில் பரலோகம் திறக்கபட்டிருக்கிறதான நான்கு இடங்கள்

1. *இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது (மத்தேயு 3 : 16, 17)*
2. *ஸ்தேவானை கல்லெறிந்து கொன்றபோது. (அப் 7 : 55, 56)*
3. *பேதுருவுக்கு தரிசனத்தில் (அப் 10 : 11)*
4. *கிறிஸ்தவன் ஒருவன் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்து கொள்ளப்பட்டான் என்று பவுல் சொல்கிற அந்த இடத்தில் (II கொரி 12 : 2, 3)*

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/O PP/5
Posted at Erode HPO on 20, ஜூலை-1997
ஜூலை-THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி:-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ் " வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor Phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
Post Box No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER BOOK-POS